## <u>இணையதள அறிவிக்கை</u>

<u>ந.க.எண்.134/2019/அ1,</u> <u>நாள்:19.11.2019</u>

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**

**மதுரை மாவட்டம்**

**வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.**

**ஒன்றிய தலைப்பு அலுவலக உதவியாளர் காலிப்பணியிடத்திற்கான நேரடி நியமன அறிவிக்கை (Notification)**

மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலகு, வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ஊதியம் பெறும் பணியிடமான ஒன்றிய தலைப்பில் காலியாக உள்ள **அலுவலக உதவியாளர்** பணியிடத்திற்கான நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழ்க்கண்ட விபரப்படி இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு குறித்த தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் 04.12.2019 தேதியன்று மாலை 5.45 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பதவியின் பெயர் மற்றும் அலுவலகம் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி (Communal Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் | 2 (இரண்டு) | பொதுப்போட்டி (General Turn)(priority) | – |
| 2 | | | ஆதிதிராவிடர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) [Schedule Caste (Arunthathiyars on Preferential Basis)] (priority) | பெண் (ஆதரவற்ற விதவை) Women - Destitue Widow |

வயது வரம்பு – 01.07.2019 தேதியன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.

**கல்வித் தகுதி** – அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு **8–ம் வகுப்பு தேர்ச்சி** பெற்றிருக்க வேண்டும்.
சிறப்பு தகுதி – மிதி வண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

அலுவலக உதவியாளர் பணிக்கு ஊதிய கட்டு: ரூ.15700 – 50000 (நிலை–1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்.

| <u>இனம்</u> | <u>01.07.2019 அன்று வயது மிகாமல் இருக்க வேண்டும்.</u> |
|---|---|
| பொதுப் பிரிவினர் | 30 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பிற்படுத்தப்பட்டோர் | 32 |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | 35 |

- விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :

  ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),<br>
  வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்,<br>
  மதுரை மாவட்டம்.

<u>நிபந்தனைகள்:</u>

1. விண்ணப்பதாரர் மதுரை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தினை madurai.nic.in என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
3. விண்ணப்பதாரர் தங்களது கல்வித் தகுதி, இருப்பிடம் (ரேசன் கார்டு மற்றும் ஆதார் காட்டு), சாதிச்சான்று முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகலினை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. இன சுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதி ஆகிய தகுதிகளற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. விண்ணப்பதாரர் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
6. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
7. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (call Letter) அனுப்பி வைக்கப்படும்.
8. விண்ணப்பம் மற்றும் சான்றுகளின் நகல்களுடன் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 04.12.2019 தேதி பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பிவைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
9. ஒவ்வொரு காலிப் பதவியிடத்திற்கும் தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
10. நியமனத்திற்கான நேர்காணலை எவ்வித முன்அறிவிப்பின்றி ஒத்திவைப்பதற்கும் மற்றும் இரத்து செய்வதற்கான அதிகாரமும் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.)க்கு உண்டு.

நாள்.–19.11.2019.

ஆணையாளர்/
வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.),
வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.
மதுரை மாவட்டம்.

19.11.19

<u>மதுரை மாவட்டம்</u>

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

## ஊராட்சி ஒன்றியத் தலைப்பில் அலுவலக உதவியாளர் / இரவுக் காவலர் பணிக்கான விண்ணப்பம்

**___________________________ ஊராட்சி ஒன்றியம்**

**(விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 04.12.2019)**

**குறியீடு எண்:** **(அலுவலகபயன்பாட்டிற்கு மட்டும்)**

**(பொருத்தமான இடத்தில் ✓செய்யவும்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | | புகைப்படம் (கையொப்பத்துடன்) |
| 2. | தகப்பனார்/கணவர் பெயர் | | |
| 3. | பாலினம் | ஆண்/ பெண்/ திருநங்கை | |
| 4. | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | | |
| 5. | விண்ணப்பிக்கும் ஒதுக்கீடு | | |
| 6. | விண்ணப்பிக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | | |
| 7. | நிலையானமுகவரி | கதவு எண்<br>தெருபெயர்<br>கிராமம்/நகர்புறம்<br>தாலுகாவின்பெயர்<br>மாவட்டம் பெயர்<br>அஞ்சல்<br>பின் கோடு | |
| 8. | விண்ணப்பதாரரின் விபரம்<br>அ) தொலைபேசி எண்<br>ஆ) கைபேசி எண்<br>இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 9. | பிறந்ததேதி | **DD** / **MM** / **YYYY** | |
| 10. | வயது (01.07.2019அன்று)<br>(SC / ST) = 18 - 35,<br>(BC / MBC) =18 – 32,<br>(Others= 18 - 30-க்கு மிகையாமல்) | | |
| 11. | இனம்<br>(பொருத்தமானவற்றை✓ செய்யவும்) | | |

| General | BC | BC(M) | MBC | SC | SC(A) | ST |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

| | | |
|---|---|---|
| 12. | வேலைவாய்ப்பு பதிவு விபரம் (இருப்பின்) | பதிவுஎண்: <br> பதிவுநாள்: <br> புதுப்பிக்கப்பட வேண்டிய நாள்: |
| 13. | அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா? | ஆம்/ இல்லை |
| 14. | ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை? (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | முன்னாள் இராணுவத்தினர் <br> கலப்புத் திருமணம் செய்தவர் <br> மாற்றுதிறனாளி: (மாற்றுத் திறனாளி சதவீதம் (ம) அடையாளஅட்டைநகல் இணைக்கப்படவேண்டும்) <br> ஆதரவற்ற விதவை / விதவை (உரிய அலுவலரின் சான்றுந கல் இணைக்கப்பட வேண்டும்). <br> இதர முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிட வேண்டும்) |
| 15. | கல்வித்தகுதி | |
| 16. | மதம் | இந்து / முஸ்லீம் / கிறிஸ்தவம் / பிற |

| | கீழ்கண்ட சான்று நகல்களை இணைத்துள்ளேன் | (பொருத்தமானவற்றை ✓செய்யவும்) |
|---|---|---|
| அ) | பள்ளிமாற்றுச் சான்றிதழ் | |
| ஆ) | கல்வித் தகுதிச்சான்று (SSLC Mark sheet) | |
| இ) | இருப்பிடசான்றிதழ் (ஆதார் அட்டை/வாக்காளர் அடையாளஅட்டை/ குடும்பஅட்டை/ வீட்டுவரிரசீது) | |
| ஈ) | சாதிச் சான்றிதழ் | |
| உ) | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில்) | |
| ஊ) | இதரதகுதிச் சான்று | |

**உறுதிமொழி**

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட **விண்ணப்பிக்கும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ 04.12.2019 தேதி மாலை 5.45 மணிக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.** காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு பதவியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும் (ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட காலிப்பணியிடத்திற்கு விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.